பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.,எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆனி 24 (7—7—72) வெள்ளி

வெளியூர்: ஆனி 25 (8—7—72) சனி [இதழ்: 20

தோழமைக் கட்சிகள் கூட்டம்

சென்னை, ஜூலை 7—

"நாளை (8-7-72) காலை 10 மணிக்கு தி.மு. கழகம்--முஸ்லிம் லீக்--பார்வர்டு பிளாக்--தமிழரசுக் கழகம்--திராவிடர் கழகம் ஆகிய தோழமைக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் சென்னை தி.மு.க. அலுவலகத்தில் நடைபெறும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

இந்திரா கட்சித் தலைவரின் விஷமம்!

கலைஞரின் கேள்விக்குப் பதில் எங்கே?

தமிழ்நாட்டில் கலகத்தைத் தூண்டிவிட முயற்சி?

சென்னை, ஜூலை 7—

கடந்த 5-7-72 அன்று தமிழ்நாட்டில், 'விவசாயிகள் கிளர்ச்சி' என்ற பெயரால் இந்திரா காங்கிரசார் உள்ளிட்ட கட்சியினர் நடத்திய அராஜகங்களையெல்லாம் மறைத்துவிட்டு, தமிழக அரசுமீது பழிசுமத்தும் திருப்பணியில் அகில இந்திய இந்திரா காங்கிரசுத் தலைவர் இறங்கியுள்ளார்.

அன்று தமிழ்நாட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 48 பேர் கொல்லப்பட்டதாகவும், தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான இந்திரா காங்கிரசுக்காரர்களின் வீடுகளைப் போலீசார் தாக்கியதாகவும் – சூறையாடியதாகவும் – பயங்கர அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டதாகவும் தந்திகள் வந்திருப்பதாக அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா கூறினார்.

இந்த விஷமத்தனமான கூற்றுக்குத் தமிழக முதல்வர் கலைஞர் தக்க மறுப்புரைத்திருந்தார். முதல்வரின் மறுப்புக்குப் பதிலளித்த சர்மா ஏதேதோ சொல்லி மழுப்பியிருக்கிறார்.

முதல்வரின் பதில்

'ஐந்தாம் நாளன்று நடைபெற்ற வன்முறைகளின் தொடர்பாக நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களில் -- போலீசு ஐ.ஜி. தந்த விவரப்படி -- ஒரு போலீசு அதிகாரி உட்பட 14 பேரும், மருத்துவமனையில் காலமான ஒருவரையும் சேர்த்து மொத்தம் 15 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

ஆனால் ஆளும் காங்கிரசுக் கட்சித் தலைவர் சங்கர் தயாள் சர்மா, 'உயிரிழந்தவர்கள் 48 (நாற்பத்தெட்டு) பேர் என்று கருதப்படுவதாக' ஒரு கணக்கைக் கொடுத்திருக்கிறார் -- என்று பி.டி.ஐ. செய்தி கூறுகிறது.

அந்தச் செய்திப்படி -- அந்த விவரங்களை அவர் அறிந்திருப்பது உண்மையானால், உடனடியாக அப்படி இறந்தவர்களின் ஊர் -- பெயர் -- ஆகியவைகளை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

அல்லது, இப்போது நீதி விசாரணைக்காக நியமிக்கப்படுகின்ற நீதிபதிகள் நால்வரிடத்திலாவது அவர் அந்த விவரங்களைத் தந்து சாட்சியங்களைத் தால பயனுள்ளதாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்; அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்வார் என்றும் நம்புகிறேன்.

நிலப் பிரபுக்களாலும் -- அவர்களுக்கு உதவியாக இருந்த காங்கிரசு -- வலது கம்யூனிஸ்டு போன்ற கட்சிகளாலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை பற்றியோ கொளுத்தப்பட்ட பஸ்களைப் பற்றியோ, கொள்ளையடிக்கப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியோ போலீசார் தாக்கப்பட்டது பற்றியோ, போக்குவரத்துக்கள் தடை செய்யப்பட்டது பற்றியோ

அகில இந்திய ஆளும் கட்சித் தலைவர் ஒரு கருத்தும் தெரிவிக்காதது வருந்தத்தக்கது."

சர்மாவின் மழுப்பல்

முதல்வரின் அறிக்கைபற்றி இந்திராகாங்கிரசுத் தலைவர் சர்மா குறிப்பிட்டதாவது:—

"பலர் உயிரிழக்கவும், காயமடையவும் நேர்ந்த விதத்தில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியது பற்றித்தான் நான் கருத்துத் தெரிவித்தேன். அடக்குமுறையையும் -- வன்முறையையும் கைவிட்டு விட்டுப் பேச்சு நடத்தத் தொடங்க வேண்டும் என்பதை நான் இப்போதும் வலியுறுத்துகிறேன்."

இதனைத் தெரிவித்த சர்மா, மின் கட்டணம் -- விவசாய வருமான வரி ஆகியவற்றைப் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரசு செயற்குழுவில் நடந்தது என்ன?

தமிழ் நாட்டில் ஜூலை 5-ஆம் நாள் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அகில இந்திய இந்திரா காங்கிரசுச் செயற் குழுவில் சிறிது நேரம் விவாதிக்கப்பட்டதாம்; இந்த விவாதத்தைத் துவக்கியவரே சர்மாதானும்!

தமிழ் நாட்டில் 48 பேர் துப்பாக்கி குண்டு மூலம் கொல்லப்பட்டதாகவும் நூற்றுக்கணக்கான இந்திரா காங்கிரசுத் தொண்டர்களின் வீடுகள் தாக்கப்பட்டதாகவும் -- சோதனையிடப்பட்டதாகவும் அவர் கூறினாராம்.

பின்னர், இந்திரா காங்கிரசு செயற்குழு போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைகளைக் கண்டித்ததும், தி. மு. கழக அரசு உடனடியாக இதை நிறுத்த வேண்டும் என்றும் கருத்தறிவித்ததாம்.

உத்தரப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரசு ஆட்சி நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 25 பேர் கொல்லப்பட்டது பற்றி இந்தச் செயற்குழு ஏதும் கருத்தறிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜூலை 5-ம் நாள் இந்திரா காங்கிரசார் உள்ளிட்ட கிளர்ச்சிக்காரர்கள் போலீசாரைத் தாக்கியும் -- பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திரா காந்திக்குக் கறுப்புக்கொடி

தலைநகரில் ஆர்ப்பாட்டம் -- கண்ணீர்ப்புகை குண்டுவீச்சு -- 25 பேர் கைது

இந்திரா காங்கிரசின் பாசிசப் போக்கிற்குச் சோஷலிஸ்டுத் தலைவர்கள் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 7—

டில்லியில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியை எதிர்த்து ஜனசங்கக் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். கறுப்புக்கொடி காட்டினர். அவர்களைக் கலைக்கப் போலீசார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

சிம்லாவில் செய்துகொள்ளப்பட்ட இந்தியா -- பாகிஸ்தான் ஒப்பந்தத்தை எதிர்த்தே இந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது.

முற்றுகைப் போர் நடத்தத் திட்டம்

இந்திரா காந்தி சிம்லாவிலிருந்து டில்லிக்கு வந்ததும் சோஷலிஸ்டுக் கட்சியினர் அவரது இல்லத்தில் முற்றுகைப் போர் நடத்தத் திட்டமிட்டிருந்தனர்; இது தொடர்பில் 25 பேர் கைது செய்யப்பட்டனர்.

டில்லியில் ஜனசங்கக் கட்சியின் அலுவலகத்திற்கு முன்னால் இந்திரா காங்கிரசார் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்திரா காங்கிரசாரின் இந்த நடவடிக்கையை சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் மணிராம் பக்ரி கண்டித்தார்.

"இது சனநாயக விரோதமான தாக்குதல் -- நாஜிகளின் பாசிச முறையையே இது நினைவுபடுத்துகின்றது -- இந்திரா காந்தியும் மற்ற இந்திரா காங்கிரசுத் தலைவர்களும் காங்கிரசாரின் இந்த ஜனநாயக விரோதச் செய்கையைக் கண்டிக்கவேண்டும்"

என்று மணிராம் பக்ரி வற்புறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் அமைதி

சென்னை, ஜூலை 7—

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைதி நிலவுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

கோவை நகரிலும் நேற்று நள்ளிரவுக்குப்பின் அமைதி நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலாளர் டில்லி பயணம்

சென்னை, ஜூலை 7—

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் பி. சபாநாயகமும்-- பொது நிர்வாகத் துறை துணைச் செயலாளர் எம். வைத்தியலிங்கமும் நேற்றிரவு விமானம் மூலம் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

முஜிபுர் ரகிமான் உடல்நிலை

டாக்கா, ஜூலை 7—

வங்க தேசத் தலைமையமைச்சர் ஷேக் முஜிபுர் ரகிமான் நோய்வாய்ப்பட்டுள்ளார்.

அவர் வயிற்று வலியால் அவதிப்படுவதாக டாக்டர்கள் தெரிவித்தனர்: முழு ஓய்வு பெறும்படி அவருக்கு டாக்டர்கள் யோசனை கூறினர்.

வங்க தேசக் குடியரசுத் தலைவர் அபு சையத் சவுத்திரி நேற்று காலையில் முஜிபுர் ரகிமானின் இல்லத்துக்குச் சென்று அவரது உடல் நிலை பற்றி விசாரித்தார்.

கடல் நீர் புகுந்தது

கண்ணனூர், ஜூலை 7—

இந்நகருக்கு அருகிலுள்ள கீழூரில் சுமார் இரண்டு பர்லாங்கு நீளமுள்ள நிலப் பகுதியில் கடல் புகுந்துவிட்டது.

கடற்கரைப் பகுதிகளான கும்பாலா, தாழங்கரை, கோயிப்பாடி, அரிக்கடை ஆகிய இடங்களிலும் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிகளிலிருந்து இதுவரை சுமார் 20 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளன.

இந்திரா காங்கிரசின் இரட்டை வேடம்

இடது கம்யூனிஸ்டுத் தலைவர் இராமமூர்த்தி கண்டனம்

'நிலப் பிரபுக்களுக்கு அரசு பணியக்கூடாது' என வலியுறுத்தல்

புதுடில்லி, ஜூலை 6—

மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைக் கொள்கை வகுப்புக் குழு (போலிட் பீரோ) உறுப்பினர் திரு. பி. இராமமூர்த்தி டில்லியிலிருந்து விடுத்துள்ள ஓர் அறிக்கையில், நிலப் பிரபுக்களுக்குத் தமிழக அரசு பணிந்துவிடக் கூடாது' என்றும், 'மின் கட்டணச் சலுகையோ, விவசாய வருமான வரிச் சலுகையோ அளிக்கக் கூடாது' என்றும் வலியுறுத்தியுள்ளார்; அவரது அறிக்கை வருமாறு:-

"தமிழ்நாட்டில் துப்பாக்கிச் சூடுகள் நடந்தது பற்றி நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யுமாறு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விவகாரத்தில் எங்களது கட்சியின் நிலையை நான் இங்கு மீண்டும் கூற விரும்புகிறேன்; நிலப் பிரபுக்களின் கிளர்ச்சிக்குத் தமிழக அரசு பணிந்துவிடக்கூடாது; மின் கட்டண விகிதங்களில் சலுகையோ அல்லது அரசுத் துறைகள் மூலமும்--கூட்டுறவு அமைப்புகள் மூலமும் நிலப் பிரபுக்கள் பெற்றுள்ள கடன் பணத்தை அவர்கள் திரும்பக் கட்டுவதில் சலுகையோ அல்லது விவசாய வருமான வரியில் சலுகையோ அளிக்கப்படுவது கூடாது என்பதே எங்கள் கட்சியின் உறுதியான நிலையாகும்.

இந்தக் கிளர்ச்சி விவகாரத்தில் ஆளும் காங்கிரசு கடைபிடிக்கும் போக்கு விசித்திரமானது!

ஒருபுறம் மத்திய அரசின் அமைச்சர்கள், 'விவசாயிகள் அனைவர் மீதும் -- பொதுமக்கள் மீதும் மேலும் அதிக வரி விதிக்க வேண்டும்' என்று பேசிவருகின்ற அதே நேரத்தில், தமிழ்நாட்டில் அதே ஆளும் காங்கிரசுக் கட்சி, நிலப்பிரபுக்களின் கிளர்ச்சியில் பங்கேற்றிருப்பது விசித்திரமாக உள்ளது."

நம்நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2003 ஆனி 24 (7—7—72) வெள்ளி

'செல்லாக் காசு'கள் நடத்திய அராஜகக் கூத்து!

கழக ஆட்சியை எப்படியாவது கவிழ்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், 'அரசியல் அமங்கலி'களெல்லாம் கூட்டுச் சேர்ந்து அரங்கேற்றியதுதான் 'விவசாயிகள் கிளர்ச்சி' என்னும் நாடகம்!

இந்த நாடகத்தின் உச்சக்கட்டம் (க்ளைமாக்ஸ்)தான் 5-7-72 அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள்!

ஜூலை ஐந்தாம் நாள் தமிழ்நாடே கிடுகிடுக்கப் போகிறது' என்றார்கள்; 'பந்த்' என்றும், 'அர்த்தால்' என்றும் சொல்லப்படும் கடையடைப்பு -- வேலைநிறுத்தம் தமிழ்நாடெங்கும் நடைபெறப்போவதாக வாய்ப்பறை சாற்றினார்கள்; 'தமிழ்நாட்டில் ஒரு மூலைமுடுக்கில்கூட, கடைகள் -- அலுவலகங்கள் திறந்திருக்காது' என்றும், 'பஸ் -- டாக்சிகள் ஓடாது' என்றும் பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கையும் செய்தனர்.

'எந்த அலுவலும் அன்று நடக்கப் போவதில்லை – எல்லாம் நிலை நின்றுவிடும்' என்று கனவுலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்த அரசியல்வாதிகள் எண்ணிக்கொண்டிருந்தனர்; ஆனால், பொதுமக்கள் நன்றாகப் புரிந்துதான் வைத்திருந்தனர் – இந்தச் 'செல்லாக் காசு'களின் 'செப்பிடு வித்தை'களை!

ஜூலை ஐந்தாம் தேதியும் வந்தது; தமிழ்நாட்டில் எந்த ஊரிலும் – எந்த அலுவலும் தடைபடவில்லை; எல்லாம் இயல்பாகவே நடந்தேறின; ஏதோ – யுகப் பிரளயமே நடைபெறப்போவது போல எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ஏமாந்தனர்; ஏமாற்றத்தின் விளைவாக எரிச்சலுற்றனர்; எடுத்தனர் – அரிவாள், தடிக்கம்பு, கடப்பாரை முதலிய ஆயுதங்களை; தொடுத்தனர் தாக்குதலை; ஆளை மட்டுமல்ல -- அரசாங்கப் பேருந்துகளை -- அரசாங்க அலுவலகக் கட்டிடங்களை -- சாலைப் பாலங்களை -- இன்னபிற பொதுச் சொத்துக்களையெல்லாம் தாக்கித் தகர்க்க முனைந்தனர்!

இவ்வளவுக்குப் பிறகும், அமைதியை நிலைநாட்ட வேண்டிய காவல் துறையினர் கையைக் கட்டிக்கொண்டா இருப்பார்கள்? தடியடி -- கண்ணீர்ப் புகை வீச்சு -- துப்பாக்கிச் சூடு என்ற அளவுக்கு நிலைமை அவர்களைக் கொண்டு சென்றிருக்கிறது!

வன்செயலைத் தூண்டிவிட்டவர்களும் -- அதற்குத் தூபமிட்டவர்களும், 'பட்டககாரர்' மாளிகையில் அமர்ந்திருந்து அகமகிழ்ந்துகொண்டிருக்க -- அவர்கள் பேச்சைக் கேட்டு அமளி துமளிகளில் ஈடுபட்ட அப்பாவிகள் சிலர் உயிரிழந்திருக்கின்றனர்; அவர்களுக்கெல்லாம் நம் அனுதாபம் உரித்தாகுக!

இப்படிப்பட்ட விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், நமது கழக அரசும் -- முதலமைச்சர் கலைஞர் அவர்களும், எவ்வளவோ முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டனர்; விவசாயச் சங்கத் தலைவர்கள் எனப்படுவோரை விடுதலை செய்தனர்; 'விவசாயச் சங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேசத் தயார்' என்றும் ஒரு முறைக்குப் பல முறை முதல்வர் அறிவித்திருந்தார்.

"அமளி துமளிகள் நடைபெறவேண்டும் -- துப்பாக்கிச் சூடு நடைபெறவேண்டும் -- அதனால் சில பிணங்கள் விழவேண்டும் -- அதை வைத்துக்கொண்டு 'அடக்குமுறை -- அக்கிரமம்' என்று ஒப்பாரி வைக்கவேண்டும்" என்பதுதானே கிளர்ச்சியைத் தூண்டிவிட்ட 'சனுவான்'களின் நோக்கம்! அவர்கள் எப்படி அமைதி ஏற்படுத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்பர்?

கலைஞரின் முயற்சியெல்லாம் வீணாயின; காவல் துறையினர் எவ்வளவோ பொறுமையாக இருந்தும் பலன் இல்லாமல், சிற்சில இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டிய அளவுக்கு வன்முறைச் செயல்கள் தலை தூக்கி விட்டிருக்கின்றன!

கடையடைப்பு -- வேலை நிறுத்தம் வெற்றி பெறவில்லையென்றாலும், கிளர்ச்சிக்காரர்கள் எதிர்பார்த்தபடி சில பிணங்கள் விழுந்துவிட்டன; களத்தில் இறங்காமலேயே 'மேட்டுக்குடி'க் கனவான்களுக்குக் 'கள வெற்றி' (?) கிடைத்திருக்கிறது; இதைக் கொண்டாடத்தான், அதே நாளில், 'பட்டக்காரர் மாளிகை' தனது கூட்டாளிகளுக்கெல்லாம் பால் -- பழம் விருந்தளித்து மகிழ்ந்திருக்கிறது!

பாட்டாளிகள் பாசறையின் தலைவரும் பட்டக்காரரின் கூட்டாளியாகி இன்சுவை விருந்துண்டிருக்கிறார்; அவருடைய 'புதிய கூட்டாளி'யான சுதந்திராவும் உடனிருந்து மகிழ்ந்திருக்கிறார்!

தமிழ்நாட்டு அரசியலில் ஆழம் பார்க்க முனைந்த 'ஆட்சிக் கவிழ்ப்பு வீரர்'களுக்குச் சரியான பாடம் புகட்டிய தமிழ் மக்களைப் பாராட்டுகிறோம்.

தமிழ்நாட்டில் கழக ஆட்சியைக் கவிழ்க்க எந்தச் சக்தியாலும் -- எப்படிப்பட்ட முயற்சியாலும் இயலாது என்பதைத் தமிழ் மக்கள் காட்டிவிட்டார்கள்; இந்த அரிய வாய்ப்பைத் தேடிக் கொடுத்ததற்காகக் 'கிளர்ச்சி'க்காரர்கட்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்; ஆழந்தெரியாமல் காலை விட்டுவிட்ட அவர்களுக்கு நம் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தமிழ் மக்களோடு ஒன்றிவிட்ட கழகத்தை இனி எவராலும் பிரிக்க இயலாது; கழகத்தைத் தவிர தமிழ் மக்களை வாழவைக்க வேறு ஒரு கட்சி தமிழ்நாட்டில் இல்லை" என்பது மீண்டும் ஒருமுறை -- ஜூலை ஐந்தாம் நாள் -- உறுதி செய்யப்பட்டு விட்டது.

'கோயபல்ஸ்' பிரசாரங்களுக்கெல்லாம் செவி சாய்க்காமல் -- ஜூலை ஐந்தாம் நாள் கட்டுப்பாடாகவும் -- மன உறுதியோடும் தத்தம் பணிகளில் ஈடுபட்டு -- அர்த்தால் முயற்சிகளை முறியடிக்க உதவிய அத்துணைப் பொதுமக்களையும் பாராட்டுகிறோம்; அமைதியை நிலைநாட்ட அரும்பாடுபட்ட காவல் துறையினருக்கும் -- கழகத் தோழர்கட்கும் -- தோழமைக் கட்சியினருக்கும் நம் பாராட்டு உரித்தாகுக!

'கொள்கை-செயலுக்கு தொடர்பின்றி இந்திரா காங்கிரசார் நடப்பதா?'

'டில்லியிலிருப்போர் இதற்குத் தூபமிடுகின்றனரா?'

'இந்த முரண்பாடான நிலை தலைமையமைச்சருக்குத் தெரிந்துதான் உருவாகியிருக்கிறதா?' -- விளக்கப்பட வேண்டிய வினாக்கள் பற்றி முதலமைச்சர் கலைஞர்

சென்னை, ஜூலை 7—

"கொள்கைக்கும் -- செயலுக்கும் தொடர்பு இல்லாமல் இங்கே உள்ள இந்திரா காங்கிரசார் நடந்துகொள்வதும் -- அதற்கு டெல்லியில் உள்ள புதிய இந்திரா காங்கிரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா போன்றவர்கள் 'தூபம்' போடுவதும் திட்டமிட்டு நடத்தப்பட்ட காரியங்களே என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

"இந்த முரண்பாடான நிலை, தலைமையமைச்சருக்குத் தெரிந்துதான் உருவாகி உள்ளதா அல்லது தெரியாமலேயே அடுத்த 'தட்டு'களில் உள்ளவர்கள் உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்களா? -- இதுவும், விளக்கப்பட வேண்டிய முக்கிய வினாக்களில் ஒன்றாகும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி ஐயம் எழுப்பினர்.

வன்முறையாளர்களின் செயல்களால் நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா விடுத்த அறிக்கை பற்றிச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"தமிழ்நாட்டில் நடந்த துப்பாக்கிச் சூடுபற்றி இந்திரா காங்கிரசின் தலைவர் சங்கர் தயாள் சர்மா கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறாரே?"

பதில்:—"உத்தரம் பிரதேசத்தில் சென்ற வாரம் போடப்பட்ட ஊரடங்குச் சட்டம் -- துப்பாக்கிப் பிரயோகம் -- அதனால் உயிர் நீத்த 25 பேர் -- இப்படிப்பட்ட செய்திகளை மறந்துவிட்டு -- அலிகார் பல்கலைக் கழகம் சம்பந்தமாக மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகளை மறந்துவிட்டு -- அந்தச் சம்பவங்களுக்கு இதுவரையில் ஒரு நீதி விசாரணை கூட நடத்தப்படவில்லை என்பதையும் மறந்துவிட்டுத் தமிழ்நாட்டில் தி. மு. கழக அரசு மீது குறைகூறி இவ்வளவு அவசரப்பட்டு அறிக்கைவிட்டிருப்பது, ஆளும் காங்கிரசுக் கட்சியின் இரட்டை வேடப் போக்கைத் தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

"இதுவரையில் போட்டிருந்த மின் கட்டண வரி போதாது என்றும் -- மேலும் 7 கோடி வரி போடுங்கள் என்றும் தமிழக அரசுக்கு மத்திய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது; ஆனால், இங்கேயுள்ள ஆளும் காங்கிரசார், இப்போதுள்ள ஒரு மின் கட்டண உயர்வையும் குறைசொல்லி வன்முறைப் போராட்டம் நடத்துகிறார்கள்.

"இனிமேல் வரி போடும் முயற்சி விவசாயத் துறையில்தான் விரிவாக்கப்பட வேண்டும் என்றும், இப்போது இருப்பதைவிடக் கூடுதலாக விவசாயிகளுக்கு வரி போட வேண்டும் என்றும் மத்திய அரசு தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது.

"பணப் பயிர் விளைவித்து, ஏராளமான இலாபம் பெறும் நில உடைமையாளர்களுக்கு விவசாய வருமான வரி விதிக்க

(8-ம் பக்கம் பார்க்க)

விவசாயிகள் சங்க செயற்குழுவில் இருந்த அரசியல் கட்சிகளுக்கு.....

'பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடாது என்பதில் அக்கறை இருந்திருக்கிறது'

'இதிலுள்ள பின்னணியை ஆராய வேண்டும்'

'நியாயமற்ற பிரச்சினைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் அரசு பணியாது' -- செய்தியாளர்களிடம் முதலமைச்சர் விளக்கம்

சென்னை, ஜூலை 7—

நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"சென்ற முறை கோவையில் நடந்த போராட்டத்தின்போது அமைதியான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்ட அரசு, இந்த முறை மிகத் தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகத் தோன்றுகிறதே -- காரணம் என்ன?"

பதில்:—சென்ற முறை கோவையில் -- ஒரு நகரத்தில் மட்டும்தான் கட்டை வண்டிகளை அவிழ்த்துவிட்டுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்தனர்; அன்றைக்கே கொந்தளிப்பான சூழ்நிலை அங்கு ஏற்பட்டிருந்தது; போலீசார் சமாளித்தார்கள்; ஆனால், 5-ஆம் நாளன்று பல வேறு சாலைகளில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக மரங்களை வெட்டிப் போட்டும் கட்டை வண்டிகளைக் குறுக்கே நிறுத்தியும் -- பாறாங்கற்களை தூக்கிப் போட்டும் -- பொதுமக்கள் போக்குவரத்துக்குச் சாலைகளில் இடைஞ்சலை ஏற்படுத்தியிருந்தனர்; அந்தத் தடைகளை அகற்றப் போலீசார் சென்றபோது, போலீசார் எண்ணிக்கை குறைவாகவும் -- தடைகளை போட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருந்த காரணத்தால் அவர்கள், போலீசாரைச் சூழ்ந்துகொண்டு பலாத்காரத்தில் ஈடுபட்டபோது தற்காப்புக்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது என்று போலீசார் தரப்பில் விளக்கப்பட்டிருக்கிறது.

"வன்முறைச் செயல்களை நாடெங்கும் நடத்த அவர்கள் திட்டமிட்டிருப்பதாக அரசுக்கு முன்கூட்டியே தகவல் தெரியவந்ததால், பலரை முன்கூட்டியே கைது செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாக அறிகிறேன்."

கேள்வி:—"முன்கூட்டியே கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்களா?"

பதில்:—"நிலைமைக்கு ஏற்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்."

கேள்வி:—"இது பெரிய பிரச்சினையாக ஆகிவிட்டதால், நீங்களே மத்தியஸ்த (நடுவர்) ஏற்பாட்டை அமைத்து -- பிரச்சினைக்கு முடிவுகாணக் கூடாதா?"

பதில்:—"அதற்குக்கூட, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தித்தானே முடிவு செய்ய வேண்டும்? பிரச்சினையைக் குறித்துப் பேசுவதற்கு நான் தயாராக இருந்தும் -- அதற்காக நேரம் குறிக்கப்பட்டிருந்தபோதும் -- நான் கோட்டையிலேயே வந்து காத்திருந்தபோதும் -- அவர்கள் என்னைச் சந்திக்கவில்லை; அவர்களுடைய 12 கோரிக்கைகளில் கூட -- அவர்களிடையே ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை; 'பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடாது' என்று செயற்குழுவில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு அதிக அக்கறை இருந்திருக்கிறது; அதற்கு என்ன பின்னணி என்பதைத்தான் ஆராய வேண்டும்."

கேள்வி:—"நிர்ப்பந்தம் காரணமாகக் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளுமா?"

பதில்:—"நிர்ப்பந்தங்கள் நியாயமானவைகளாக இருந்தால், நிர்ப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பே அரசு அதற்கு இணங்கும்; இந்த அரசைப் பொறுத்தவரையில், அதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு என்பதை நாடு அறியும்; ஆனால் நியாயமற்ற பிரச்சினைகளுக்கும் -- நிர்ப்பந்தங்களுக்கும் அரசு பணியாது."

வன்முறையாளர்கள் வெறியாட்டம்--- அரிவாள்--கம்புகளுடன் ஆர்ப்பாட்டம்

[★]

அண்ணா சிலையை உடைத்து நொறுக்கினர்-- தி. மு. கழக அலுவலகத்திற்குத் தீயிட்டனர்-- சரமாரியாகக் கற்களை வீசிச் சேதம் விளைவித்தனர்-- கழகச் செயலாளர்களின் இல்லங்களைத் தாக்கினர்

கழகத் தோழர் கத்தியால் குத்தப்பட்டார்--பலர் காயமடைந்தனர்

கோவை, ஜூலை 7--

நேற்று முன்தினம், கோவை மாவட்டம் பல்லடம் அருகே நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்த 2 பேர்களின் பிணங்களை விவசாயச் சங்கத்தினர் கோவைக்குக் கொண்டுவந்தனர்; சவ ஊர்வலம் நடத்தினார்கள்; இதையொட்டிப் பல வன்முறைச் செயல்கள் நடைபெற்றன.

கோவை தெப்பக்குளம் மைதானத்திற்கு அருகில், தி.மு. கழக அலுவலகம் இருக்கிறது; அந்த அலுவலகத்தை நோக்கி 2,000 பேர் வந்தார்கள்; அவர்கள் வலது கம்யூனிஸ்டுக் கொடிகளைப் பிடித்திருந்தனர்; தி. மு. கழக அலுவலகத்துக்கு அவர்கள் தீவைத்தனர்; அலுவலகத்தின் கூரை எரிந்து சாம்பல் ஆயிற்று; அலுவலகத்தின் மீது சரமாரியாகக் கற்களை வீசினர்; 'தி. மு. கழகத்தைப் பழிக்குப் பழி வாங்குவோம் -- தி. மு. கழகத் தலைவர்களைக் கொல்வோம்' என்று அவர்கள் குரல் எழுப்பினர்.

இந்தத் தாக்குதல் நடந்தபோது மாவட்டச் செயலாளர் இராசமாணிக்கம், அரங்கநாதன் எம்.எல்.ஏ. காட்டூர் கோபால் எம்.எல்.சி., இராமநாதன் எம்.எல்.சி. மற்றும் பலர் அலுவலகத்தில் இருந்தனர்; கல்வீச்சில், இராமநாதன் எம்.எல்.சி.-க்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது.

தி. மு. கழகத் தோழர் இரத்தினம் என்பவர் கத்தியால் குத்தப்பட்டார்; நகராட்சி தி. மு. கழக உறுப்பினர் சண்முகம் உட்பட 22 பேர் காயமடைந்தனர்.

பிறகு இந்த வன்முறையாளர்கள் கோவை பழைய மார்க்கெட்டுக்குள் புகுந்து கடைகளுக்குத் தீவைத்தனர்; இராமகிருஷ்ணாபுரத்தில் அண்ணா சிலையை உடைத்து நொறுக்கினர்.

கோவை கடைவீதி -- காந்திபுரம் -- சக்கரவார்பேட்டை -- அவினாசி ரோடு -- திருச்சி ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளுக்குள் இரவு வன்முறையாளர்கள் புகுந்து, சோடா பாட்டில்களை எடுத்து வீசினர்; கடைகளை உடைத்து நொறுக்கினர்.

தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்கள், கழகச் செயலாளர்கள் ஆகியோரின் வீடுகள்மீது கற்கள் வீசப்பட்டன.

கோவை பி.எஸ்.ஜி. கல்லூரிக்கு அருகில் ஒரு டவுன் பஸ்ஸை வன்முறையாளர்கள் தடுத்து நிறுத்தினர்; பஸ் டிரைவரை இரும்புத் தடியாலும் -- கம்பாலும் அடித்தனர்; டிரைவர் படுகாயமடைந்தார்; பஸ்சும் தாக்கப்பட்டது; போலீசார் விரைந்து வந்து கூட்டத்தைக் கலைத்தனர்.

கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இராசமாணிக்கம் வீட்டிற்கு முன்னால் ஏறத்தாழ 1,000 பேர் அரிவாள் -- கம்புகளுடன் கூடி கலாட்டா செய்தனர்; போலீசார் அங்கு வரவே அந்தக் கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

டவுன் ஹால் ரோட்டில், தெரு விளக்குகளை வன்முறையாளர்கள் உடைத்து நொறுக்கினர்.

'தினத்தந்தி' அலுவலகம் தாக்கப்பட்டது

வலதுசாரி கம்யூனிஸ்டுகள் ஏறத்தாழ 500 பேர், அரிவாள் -- கம்புகளுடன் கோவையில் உள்ள 'தினத் தந்தி' அலுவலகத்துக்கு நேற்று ஊர்வலமாக வந்தனர்; அலுவலகத்தின் முன் கூடிநின்று சரமாரியாகக் கற்களை வீசினர்; இதனால் கண்ணாடி ஜன்னல்களும் -- விளக்குகளும் நொறுங்கின.

கூட்டத்தைக் கலைக்க முயன்ற போலீசார் மீதும் கல் வீசப்பட்டது; சற்று நேரத்தில் மேற்கொண்டு போலீசார் வரவே -- கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

'மாலை முரசு' அலுவலகம் தாக்கப்பட்டது

இதேபோல், 'மாலை முரசு' அலுவலகத்தையும், வன்முறையாளர் கூட்டம் தாக்கியது; கல்வீச்சில் ஏராளமான பொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

கோவை மாவட்ட கலெக்டர் சிவகுமார் கூறியதாவது:—

"கோவையில் பாதுகாப்புக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன; ஞாயிறுக்கிழமை வரையில் மாவட்டத்தில் எல்லாக் கல்லூரிகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டிருக்கும்."

அரசுப் பேருந்துகளுக்குத் தீ-- நடுவழியில் பயணிகள் அவதி

இரயில் போக்குவரத்தை நிறுத்தும் முயற்சி தோல்வி

கோவில்பட்டி, ஜூலை 6—

நெல்லை மாவட்டம் கோவில்பட்டியை அடுத்த நல்லி கிராமத்தில் இரண்டு அரசுப் பேருந்துகளை வலது கம்யூனிஸ்டுகள் தடுத்து நிறுத்தினர்; பயணிகள் கீழே இறங்கியதும் அந்த 2 பஸ்களும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

பாதிக்கப்பட்ட பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக, எக்ஸ்பிரஸ் பஸ்கள் நல்லியில் நின்று செல்வதற்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர்.

நல்லியில் நிற்காத இரயில்களும் நிறுத்தப்பட்டு பயணிகள் ஏற்றப்பட்டனர்.

இரயில்வேத் துறை அறிக்கை

தமிழ்நாடு முழுவதும், நேற்று இரயில்கள் வழக்கம்போல் ஓடின; இதுபற்றி, தென் இந்திய இரயில்வே அறிவித்திருப்பதாவது:—

"தமிழ்நாட்டில் இரயில்கள் வழக்கம்போல் ஓடின; எக்ஸ்பிரஸ் இரயில்கள், வழக்கமான நேரத்துக்கு வந்து சென்றன.

சென்னையில் மின்சார இரயில்களும், பாதிப்பு இல்லாமல் ஓடின.

பெங்களூர் -- திருப்பாப்புலியூர் பாசஞ்சர் இரயில் 3 முறை நிறுத்தப்பட்டது; வன்முறையாளர்கள் தண்டவாளத்தில் பாறாங்கல் வைத்திருந்ததாலும், அபாயச் சங்கிலியை இழுத்ததாலும் இரயில் நின்று சென்றது.

தர்மபுரி -- சேலம் பாசஞ்சர் இரயில், செமந்திப்பட்டி இரயில் நிலையத்தில் அரை மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தண்டவாளத்தில் உட்கார்ந்து சிலர் மறியல் செய்ததே இதற்குக் காரணம்.

தூத்துக்குடி -- கோவை பாசஞ்சர் இரயில் வந்தபோது, தண்டவாளத்தில் சிலர் மாட்டு வண்டிகளை நிறுத்தினர்; இதனால் அந்த இரயில் சில நிமிடங்கள் நின்று பிறகு புறப்பட்டுச் சென்றது."

வன்முறைகளையொட்டி நடைபெற்ற துப்பாக்கிச் சூடு

4 மாவட்ட நீதிபதிகள் நீதி விசாரணை நடத்துவர்

முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 7

"தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க நீதி விசாரணை நடைபெறும்; கோவை, சேலம், இராமநாதபுரம், நெல்லை ஆகிய மாவட்டங்களில் இந்த நீதி விசாரணை நடைபெறும்.

"கோவில்பட்டி சம்பவங்களை விசாரிக்க நெல்லை மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட நீதிபதியும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை -- சாத்தூர் -- சூலக்கரை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க ஒரு மாவட்ட நீதிபதியும், பெத்துநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க சேலம் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட நீதிபதியும் பல்லடத்தில் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க கோவை மாவட்டத்துக்கு ஒரு நீதிபதியும் நியமிக்கப்பட இருக்கிறார்கள்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிற்பட்டோர் நலக் கமிஷன்

மைசூரிலும் அமைக்க யோசனை

பெங்களூர், ஜூலை 6—

"கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்வது சம்பந்தமாகவும், உத்தியோகத் துறையில் வேலை கொடுப்பது சம்பந்தமாகவும் இடங்கள் ஒதுக்குவதையும் மற்றும் முறைகளை வகுத்துக் கூறி பிற்பட்ட வகுப்பினர் கமிஷனர் நியமிப்பதைப் பற்றி யோசித்து வருகிறது"

என்று மைசூர் முதல்வர் தேவராஜ அர்ஸ் தெரிவித்தார்.

மைசூர் சட்டமன்றத்தில் வரவு-- செலவுத் திட்ட விவாதத்துக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மன்னிப்பு கேட்ட 'போராட்ட வீரர்'கள்-- 543 பேர் விடுதலை

சென்னை, ஜூலை 6—

விவசாயிகள் கிளர்ச்சியையொட்டிக் கைதாகிச் சிறையிலுள்ளவர்களில் இதுவரையில் 543 பேர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்ததன்பேரில் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் 299 பேர் விசாரணைக் கைதிகள்; 244 பேர் தண்டனைக் கைதிகள்.

தமிழக அரசு பத்திரிகைச் செய்திக் குறிப்பில் இந்தத் தகவல் வெளியாகியிருக்கிறது.

மேலும் பலர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்திருப்பதாகவும்-- அவை பரிசீலனையில் இருப்பதாகவும் அதில் கூறப்பட்டிருக்கிறது.

காலிகளின் மிருக வெறிச் செயல்

போலீசார்--அரசு ஊழியர்கள் தாக்கப்பட்ட கொடுமை

என். ஜி. ஓ. சங்கத் தலைவர் கண்டன அறிக்கை

சென்னை, ஜூலை 6—

வன்முறைச் சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவித்துத் தமிழ்நாடு என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் சிவ. இளங்கோ விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:—

"விவசாயிகள் கிளர்ச்சி--என்னும் பெயரால் பல இடங்களில் வன்முறைக் கும்பல்கள், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள போலீசாரையும்--அரசு ஊழியர்களையும் தாக்கிப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர்; அவர்கள் சென்ற வாகனங்களைக் கூட்டமாக வழிமறித்துப் பயங்கர ஆயுதங்களால் தாக்கியிருக்கின்றனர்.

அரசு அலுவலகங்களின்முன் மறியல் -- என்னும் பெயரால் முறைகேடாக நடந்துகொண்டிருக்கின்றனர்; ஆயிரக்கணக்கானவர் இருக்கும் பகுதியில் பாதுகாப்புக்காகச் செல்லும் சில போலீசாரைத் தாக்குவது அவர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது.

'போலீசாருக்கும் குடும்பங்கள் -- பிள்ளை குட்டிகள் உண்டு; வன்முறைக் கும்பல், போலீசாரையும் -- போலீசு நிலையங்களையும் திட்டமிட்டுத் தாக்கிப் படுகாயப்படுத்துவதும், பெரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்தத் தங்கள் உயிரையும் -- அரசு உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்ளத் தக்க நடவடிக்கை தேவையாகிறது.

போலீசாருக்குச் சங்கம் இல்லை; அவர்கள் துன்பங்களை எடுத்துக் கூற வாய்ப்பு இல்லை; போலீசாரும், எங்களுடன் உழைக்கும் அரசு ஊழியர் ஆவர்.

போலீசார், தங்களை ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தியுள்ளதால், அவர்கள் குடும்பத்துக்கும் பாதுகாப்புத் தேவை.

எனவே, சில ஊர்களில் காலித்தனங்களில் ஈடுபட்டோரையும், போலீசாரையும் -- அரசு ஊழியரையும் படுகாயப்படுத்தியவர்களையும் தமிழ்நாடு என். ஜி. ஓ -- க்கள் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது."

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பது டெல்லியின் கொள்கையாகும்; அதை மாநில அரசு செயல்படுத்தும்போது, ஆளும் காங்கிரசாரும், சோஷலிசம் பேசுகின்ற சில அரசியல்வாதிகளும் எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறார்களே -- அதுபற்றி இந்தியாவின் மிகப் பெரிய சோஷலிசக் கட்சியின் தலைவரான சங்கர் தயாள் சர்மாவின் கருத்து என்ன -- அவர் அதை விளக்க வேண்டும்."

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். சென்னை திரும்பினர்

விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு

சென்னை, ஜூலை 7—

கல்கத்தாவில் நடைபெற்ற 19-வது தேசியத் திரைப்பட விழாவில் அனைத்திந்தியச் சிறந்த நடிகர் விருதினைப் பெற்றுக்கொண்டு நேற்று புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் சென்னை திரும்பினார்.

விமான நிலையத்தில் தமிழக முதலமைச்சர் கலைஞர் -- கல்வி அமைச்சர் நாவலர் -- அமைச்சர் பெருமக்களும் -- கழக முன்னணியினர் மற்றும் தோழர்களும், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தினரும் திரண்டிருந்து புரட்சி நடிகருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து வரவேற்றனர்.

மாலை 5-15 மணிக்கு இந்தியன் ஏர் லைன்ஸ் விமானம்மூலம் புரட்சி நடிகர் வந்திறங்கினார்.

அவரை வரவேற்க காலை 11 மணியிலிருந்தே விமான நிலையத்துக்கு மாலைகளுடனும் கழகக் கொடிகளுடனும் மக்கள் அணி அணியாக வரத் தொடங்கிவிட்டனர்.

மாலை 3-மணிக்கு வரும் விமானத்தில் அவர் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், 'மாலை 5-15 மணிக்கு வந்த விமானத்தில்தான் அவர் வர இருக்கிறார்' என்ற தகவல் கிடைத்ததும், அதுவரையிலும் கலையாமல் மக்கள் விமான நிலையத்தின் உள்ளேயும் வெளியேயும் காத்திருந்தனர்.

விமானத் தளத்தில் இறங்கியதும் முதலமைச்சர் கலைஞருடன் அமைச்சர் பெருமக்களும், கழக முன்னணியினரும் -- கலையுலகப் பிரமுகர்களும், சென்று புரட்சி நடிகருக்கு மாலைகள் அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

வெளியில் நின்றிருந்த திரளான மக்கள், கட்டடத்தின் இருமருங்கிலும் கூடிநின்று உற்சாகமாக வாழ்த்தொலி கூறி கரம் அசைத்துத் தங்கள் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

விமானத் தளத்திலிருந்து புரட்சி நடிகர் கட்டட உள் வாயில் வழியாக வந்தபோது, அங்கே திரளாக நின்றிருந்த கலையுலகப் பிரமுகர்கள் புரட்சி நடிகருக்கு மாலை அணிவித்து வாழ்த்தொலி முழங்கினர்.

வெளியே ரசிகர்களின் உற்சாகம் பொங்கிய முழக்கங்கள் கேட்டன; புரட்சி நடிகருக்கு அவர்கள் கைத்தறி ஆடைகளும் -- மலர்களும் அணிவித்துப் பெருமிதமடைந்தனர்.

புரட்சி நடிகருடன் அவரது துணைவியாரும், 'ரிக்ஷாக்காரன்' படத் தயாரிப்பாளர் ஆர். எம். வீரப்பன் அவர்களும் கல்கத்தாவிலிருந்து வந்தனர்.

ஈ. ஆர். கிருஷ்ணன் இல்லத் திருமணம்

நாடாளுமன்ற உறுப்பினரும் -- சேலம் மாவட்ட தி.மு.க. செயலாளருமான திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களின் மகன் செல்வன்: கி. இராசமோகன்—செல்வி: லதா திருமணம், 9-7-72 காலை 9-மணியளவில் சேலம் நேரு கலையரங்கில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலும் -- கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்; அமைச்சர்கள் க. இராசாராம், மன்னை ப. நாராயணசாமி மற்றும் நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட -- வட்டச் செயலாளர்களும், சான்றோர்களும் வாழ்த்துரை வழங்குவர்.

திருமணங்கள்

பழையனல்லூர் ஊராட்சிமன்றத் தலைவர் தோழர் இரத்தின பால குருசாமி அவர்களின் முதல் மகள் செல்வி: பா. மாலைமணிக்கும்—செல்வன்: நா. நடுசாமிக்கும், 9—7—72 காலை 7-45 மணியளவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையிலும்—பொதுச்செயலாளர் நாவலர், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

மதுரை மாநகராட்சி உறுப்பினர் அ. கு. மதிவாணன்—செல்வி: அன்னக்கிளி ஆகியோரின் திருமணம், 9—7—72 காலை 11மணியளவில் தத்தனேரி மாநகராட்சித் தொடக்கப் பள்ளியில், மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் தலைமையிலும்—அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] சென்னை-10) [illegible]

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம் நிகழ்ச்சிகள்

ஜூலை 8 காலை 10 மணி: குன்னூர்; 10-30 மணி: நீலகிரி காபி-தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்க எட்டாவது ஆண்டு கூட்டத் தலைமை.

ஜூலை 9 மாலை 4-மணி: திருவண்ணாமலை—அரிமா சங்கத்தினரால் கல்லூரி -- உயர்நிலைப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற சிறந்த மாணவர்களுக்கு வழங்கும் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ளல்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

மன்னை நாராயணசாமி நிகழ்ச்சிகள்

ஜூலை 9 காலை 9-30 மணி: அரியாக்கவுண்டம்பட்டி (சேலம்)—தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 10-30 மணி: தளவாய்ப்பட்டி தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 11 மணி: சேலம்—இரும்பாலைத் திட்டப் பகுதியிலிருந்து குடிபெயர்வோருக்காகப் புதிதாக ஏற்படும் டாக்டர் கலைஞர் கருணாநிதி நகர் மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் விழா; மாலை 3-30 மணி: சேலம் ஊராட்சி ஒன்றியக் குழுவின் வரவேற்பு விழாவும், விவசாயக் கிடங்குக் கட்டடங்கள் திறப்பு விழாவும்; 4-30 மணி: வீரபாண்டி—வீரபாண்டி ஊராட்சி ஒன்றியக் குழுவில் வரவேற்பு விழா -- விவசாயத் துணைக் கிடங்குக் கட்டடத் திறப்பு விழா; அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் விழா; 5-30 மணி: சின்னசீரகாபாடி — மகப்பேறு நிலைய புதியக் கட்டடத் திறப்பு; 6-30 மணி: பெருமாக்கவுண்டம்பட்டி—மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு விழாவும், புதிய பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவும்; இரவு 7-30 மணி: வேம்படிதாளம்—பாராட்டு விழா.

பாராட்டுக் கூட்டம் தள்ளிவைப்பு

சென்னை, ஜூலை 7—

"புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்குப் பாராட்டு வழங்கும் பொருட்டு இன்று (7—7—72) சென்னைச் சீரணி அரங்கில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது; கூட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்"

என்று சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

கடலூரில் பெரியார் சிலை

முதலமைச்சர் கலைஞர் திறந்துவைக்கிறார்

கடலூர் மஞ்சைநகர் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைக்கிறார்.

இந்த விழா, 9-9-72 மாலை 6-மணிக்கு சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பகுத்தறிவு ஓவியக் கண்காட்சியை அமைச்சர் ப. உ. சண்முகம் திறந்துவைப்பார்.

அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பெரியாருக்குப் பணமுடிப்பு அளிப்பார்.

திரு. அன்பில் தர்மலிங்கம் பாராட்டுரை வழங்குவார்.

தந்தை பெரியார் அவர்கள் அறிவுரை வழங்குவார்.

கழக இடைத் தேர்தல்

"சென்னை 106-வது வட்ட தி. மு. கழகக் கிளையில் காலியாக உள்ள பொறுப்புக்களுக்கான இடைத் தேர்தல், 9—7—72 அன்று மேட்லி தெரு, எண் ...ள்ள இல்லத்தில் சா. கோவிந்தசாமியை ஆணையாளராகவும் -- தியாகைபத்திரனைத் துணை ஆணையாளராகவும் கொண்டு நடைபெறும்.

'107-வது வட்டக் கிளையின் இடைத் தேர்தல் அதேநாளன்று எஸ். ஏழுமலையை ஆணையாளராகவும் -- பி. மாரியப்பனைத் துணை ஆணையாளராகவும் கொண்டு அஞ்சுகம் மகளிர் இல்லத்தில் நடைபெறும்"

என்று தியாகராயநகர் பகுதிச் செயலாளர் வை. பாலசுந்தரம் அறிவிக்கிறார்.

நிலச் சரிவில் புதையுண்டனர்

டோக்கியோ, ஜூலை 7—

தெற்கு ஜப்பானில் பலத்த மழை காரணமாக மேலும் நிலச் சரிவுகள் ஏற்பட்டன; இதனால் 140 பேர் மாண்டனர் -- 67 பேரைக் காணவில்லை.

ஷிகோகு தீவிலுள்ள டோயோமாடா என்ற ஊரில் ஏற்பட்ட நிலச் சரிவில் 59 பேர் புதையுண்டனர்; தொடர்ந்து மழை பெய்வதால் மேற்கொண்டு நிலச்சரிவுகள் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதால் மீட்சி வேலை தடைபட்டுள்ளது.

இந்திரா கட்சித் தலைவரின் விஷமம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் வெறியாட்டம் நடத்தியதையெல்லாம் மூடி மறைத்துவிட்டுக் கழக அரசு மீது பழி போட முனைந்திருக்கிறார்—அ. இ. இந்திரா காங்கிரசுத் தலைவர்!

அராஜக வெறியாட்டங்களை அனுமதித்துவிட்டுப் போலீசார் கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்திருக்க வேண்டும் என்பதுதான் இந்திரா காங்கிரசுத் தலைவரின் எண்ணம் போலும்!

தமிழ்நாட்டில் 14 பேர்கள் மட்டுமே துப்பாக்கிச் சூட்டினால் இறந்திருக்க, 48 பேர் இறந்ததாக அப்பட்டமான பொய்யைத் துணிந்து கூறியிருக்கிறார்—சர்மா!

தமிழக முதலமைச்சர் அதை மறுத்து, 'இறந்தவர்களின் பட்டியல் விபரம் தரத் தயாரா?' என்று கேட்டதற்கும் அவர் பதில் தரவில்லை!

ஜூலை 6-ஆம் நாளும் கோவையில், தி. மு. க. அலுவலகமும், 'தினத் தந்தி' -- 'மாலை முரசு' அலுவலகங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களால தாக்கப்பட்டிருப்பதுடன், கழகத் தோழர்களும் தாக்கப்பட்டிருக்கின்றனர்; இது பற்றியும் சர்மா ஒரு வார்த்தைக்கூடக் குறிப்பிடவில்லை!

அராஜக வெறியாட்டத்துக்கு ஆதரவு தரும் வகையிலும் -- தூண்டி விடும் வகையிலும் அகில இந்திய இந்திரா கட்சித் தலைவர் நடந்துகொள்கிறார் என்பதையே இது காட்டுகிறது!

ஒரு சார்பான தகவல்களை வைத்துக்கொண்டு ஒரு பொறுப்பான அகில இந்தியத் தலைவர், உணர்ச்சிவயப்பட்டுப் பொய்யான தகவல்களைக் கொடுப்பது -- எத்தகைய விபரீதத்தை விளைவிக்கும் என்பதை, இந்திரா காங்கிரசுத் தலைமை உணர்ந்துகொள்ளவேண்டும்.

மொத்தத்தில், சங்கர் தயாள் சர்மாவைத் தமிழகம் அடையாளம் கண்டுகொண்டுவிட்டது!

மாவட்ட கலெக்டருக்கு வழி விட மறுப்பு

கோவில்பட்டியில் கிளர்ச்சிக் காரர்கள் முறையற்ற செயல்

மதுரை, ஜூலை 7—

5—7—72 அன்று கோவில்பட்டியில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்திய இடத்திற்குத் திருநெல்வேலி மாவட்ட கலெக்டரும்--மாவட்டப் போலீசு சூப்ரண்டெண்டும் செல்ல முடியாமல் சாலையில் தடுப்புகள் போடப்பட்டிருந்தன.

தடுப்புக்களை நீக்கித் தாங்கள் செல்ல அனுமதிக்குமாறு அங்கிருந்த நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களை கலெக்டர் கேட்டுக்கொண்டார்; ஆனால் அவர்கள் பிடிவாதமாக மறுக்கவே அதிகாரிகள் தங்கள் செயலகத்துக்குத் திரும்பிவிட்டனர்.

மேற்குஜெர்மனியின் நிதியமைச்சர் கார்ல்ஷில்லர், தமது பதவியை இராஜினாமா செய்தார்.

"இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடக்கவிருக்கும் நிலைமையில் அவர் தமது பதவியை இராஜினாமா செய்வது—தேர்தல் வாய்ப்புக்களைப் பெரிதும் பாதிக்கும்," என்ற ஐயத்திற்கு இடமளித்துள்ளது.

மாற்றுக் கட்சி ஆளும் மாநிலங்களுக்கு அநீதி

மத்திய அரசின் போக்கு -- மைசூர் முன்னாள் அமைச்சர் கண்டனம்

மாநில நிதி விவகாரங்களில் குறுக்கிடுவதற்கு எதிர்ப்பு

பெங்களூர், ஜூலை 6—

"மத்திய அரசின் நிதி அதிகாரங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும்.

'மத்திய எக்சைஸ் தீர்வைகளை அதிகரிப்பதற்கும் ஏதாவது வரம்பு இருக்கவேண்டும்; அவ்வாறு செய்யாவிடில், மாநிலங்களில் விற்பனை வரித் துறையில் நீக்குப்போக்கு நிலை போய்விடும்.

"ஆண்டுதோறும் மத்திய எக்சைஸ் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டு வருமேயானால், மக்கள், பொருள்களைப் பயன்படுத்துவது குறைந்து -- மாநிலங்களின் விற்பனை வரி வருமானம் குறைந்துவிடும்"

என்று மைசூர் மேலவையில், முன்னாள் நிதியமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே, வரவு--செலவுத் திட்ட விவாதத்தினமீது பேசுகையில் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் கூறியதாவது:-

"பரிசுச் சீட்டுகள், குதிரைப் பந்தயப் பரிசுகள்மீது வரி போடுவதன் மூலம், மாநிலங்களின் நிதிகளில் மத்திய அரசு குறுக்கிடுகிறது; பந்தய வரியை உயர்த்துவதன் மூலம் மாநிலங்கள் அதிக வருவாய் பெற்றிருக்க முடியும்.

மத்திய -- மாநில அரசுகள் வரி வருமானப் பகிர்வுக்கு வர முடியாத இனங்கள்மீது மத்திய அரசு எக்சைஸ் தீர்வையை அதிகரித்து வருவது கண்டிக்கத்தக்கதாகும்.

இந்திரா காங்கிரசு ஆட்சியிலுள்ள மாநிலங்களுக்கும் - மற்ற மாநிலங்களுக்குமிடையில மத்திய அரசு பாகுபாடு செய்துவருகிறது.

மத்திய அரசு ஊழியர்களுடைய ஊதியங்களுக்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களின் ஊதியங்களை உயர்த்துவதற்கான வேளை வந்துவிட்டது."

தமிழறிஞர்

எஸ். சச்சிதானந்தனார் மறைவு

சென்னை, ஜூலை 7—

முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிவாளரும் -- தமிழ்ப் பேரறிஞருமான திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தமது 85-வது வயதில் சென்னையில் உள்ள தமது இல்லத்தில் நேற்று இயற்கையெய்தினார்.

சென்னை மாநகராட்சியின் கல்வி அதிகாரியாக இருந்து -- பின்னர் கல்வித் துறை இயக்குநராக உயர்ந்து ஓய்வு பெற்றபின், அண்ணாமலை பல்கலைக் கழகப் பதிவாளராக சிறிது காலம் பணியாற்றினார்.